**இராணி மேரிக் கல்லூரி (த)**
**முதுகலை மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறை**
**வேதியியல் மன்ற அறிக்கை**

வேதியியல் துறை மன்றக் கூட்டம் 3.2.2026 அன்று காலை 10.00 மணியளவில் கருத்தரங்க மண்டபத்தில் முதல்வர், முனைவர் பா.உமாமகேஸ்வரிஅவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் **Mass Spectrometry** - மூலக்கூறு எடை மற்றும் கரிமச் சேர்மங்களின் வடிவமைப்பைத் தீர்மானித்தல்" என்ற தலைப்பின் கீழ் **முனைவர் டி. கவாஸ்கர்** (இணைப் பேராசிரியர், வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை) அவர்கள் சிறப்புரையாற்றினார். பின்னர் மாணவிகளின் கலந்துரையாடல் மற்றும் விளக்கவுரை நடைபெற்றது.




சென்னைப் பல்கலைக் கழகத்தின் **RUSA - ARUMBU - 2026** திட்டத்தின் கீழ் R. Jeevitha (II. M. Sc) ரூ. 10000/- பயனடைந்துள்ளார்.




**Dr. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் சுழற்சி கேடயத்திற்கான**, கல்லூரிகளுக்கிடையேயான "Quest-2026" என்ற முதுகலை மாணவர்களுக்கான வேதியியல் வினாடி-வினா போட்டி 10.02.2026 அன்று இராணி மேரி கல்லூரியின் கருத்தரங்க கூடத்தில் நடத்தப்பட்டது. சென்னையில் உள்ள 10 கல்லூரிகளிலிருந்தும், இராணி மேரி கல்லூரியிலிருந்தும் சுமார் 45 முதுகலை மாணவர்கள் முதல் சுற்றில் பங்கேற்றனர். அவர்களிலிருந்து 5 குழுக்கள் இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றனர். கரிம, கனிம, இயற்பு ,பகுப்பாய்வு வேதியியல் மற்றும் பயன்பாட்டு வேதியியல் சார்ந்த பல சுற்று வினாக்களுக்கு மாணவர்கள் ஆர்வத்தோடு விடையளித்தனர். முடிவில் சென்னை, அரும்பாக்கத்தைச் சார்ந்த டி.ஜி.வைஷ்ணவா கல்லூரி மாணவர்கள் சுழற்சி கேடயத்தை வென்றனர். இலயோலா கல்லூரி மாணவர்கள் இரண்டாம் இடத்தையும், மூன்றாம் இடத்தை, சென்னை தாம்பரம் கிறித்துவக் கல்லூரி மாணவர்களும் பெற்றனர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுத் தொகையும், சான்றிதழ்களையும், கல்லூரி முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இராணி மேரிக் கல்லூரி, **அறிவியியல் மன்றம்** 10.02.2026 அன்று நடத்திய இளம் அறிவியியல் மாணவர்களுக்கான வினாடி வினா நிகழ்ச்சியில், வேதியியல் துறை மாணவியர்கள் இந்துஷா (II B.Sc.Chemistry EM) முதல் பரிசும், குணப்பிரியா (II B.Sc. Chemistry EM), லீலாவதி (III B.Sc.Chemistry EM) இரண்டாம் பரிசும், இன்பென்ட் செல்ஸியா (III B.Sc. Chemistry EM) பங்கேற்றமைக்கான பரிசுகளையும் வென்றனர்.